

கற்பூர ஆழி

தர்கள் தம்மை வளப்படுத்தும் அடையாளமாக இதனைக் காண முடிகிறது.

## கற்பூர ஆழி

கற்பூரப் பிரியன் ஐயப்பன். எனவே ஆழிவளர்த்து, கற்பூரம் எரித்து வழிபடுவர் ஐயப்ப பக்தர்கள். நெருப்பில் கரைந்து மறையும் கற்பூரம் போலவே இறையருளில் கலந்து கரைந்திடும் ஆன்ம வேட்கையின் குறியீடே கற்பூர ஆழி. சந்நிதானம் செல்லும் வழியில் கற்பூர ஆழியில் கற்பூரம் போட்டு விட்டுப் படியேறுவர் பக்தர்கள்.

## கற்பூர தீபம்

'கற்பூர தீபம் சுவாமிக்கே' எனும் கோஷம் அனைவரும் அறிந்ததே. ஐயப்பன் கற்பூர தீபப் பிரியன். விரத நாட்களும், யாத்திரை வழிகளும், சந்நிதான ஆழியும் கற்பூர ஒளியில் இருவினை பொசுக்கும்.

## கறுப்ப சுவாமி

பதினெட்டாம் படியின் கீழ் வட பகுதியில் கறுப்ப சுவாமியின் பிரதிஷ்டை உள்ளது. கற்பூரமும், முந்திரிப்பழமும் வழிபாட்டுப் பொருட்கள்.

## காள கட்டி

சபரிமலை யாத்திரையில் எருமேலியிலிருந்து சுமார் 13 கி.மீ. தூரத்தில் அமைந்த தாவளம். பெருந்தோட்டிற்குப் பின் வருவது. எழில் மிக்க தங்கிடம். மகிஷியை வதம் செய்து நர்த்தனம் புரிந்த ஐயப்பனைக் கண்டு மகிழ வந்த சிவபெருமான் தமது காளையைக் கட்டிய இடமாதலால் இப்பெயர் பெற்றது என்பர். உதயணனைப் போரிட்டு வெல்ல வந்த ஐயப்பன் தமது காளையைக் கட்டிய இடம் என்றும் கூறுவர். இங்கு ஒரு சிவாலயம் உள்ளது. ஐயப்ப பக்தர்கள் தேங்காய் உடைத்தும், கற்பூரம் ஏற்றியும், காணிக்கை இட்டும் வழிபடுவர்.

## கிறிஸ்துவம்

புனித செபாஸ்தியான் தர்ம சாஸ்தாவின் தோழராகக் கருதப்படுகிறார். 'வெளுத்தச்சன்' என நாட்டுப்புறப் பாடலில் இவர் குறிப்பிடப்படுகிறார் என்பர். கொச்சுத் தொம்மனைத் தாமஸ் எனக் கருதுவர். சந்நிதானத்தின் முன்பு ஒருமுறை நெருப்பால் அழிவு நேரிட்ட போது சீரமைத்து உதவியவர் இவர் என்பர். ஐயப்ப வழிபாடு கிறிஸ்துவத்துடன் மேற்கொள்ளும் நல்லுறவுக்கு இது அடையாளம் எனலாம்.

## குருசாமி

குருசாமி ஓர் ஆன்மீக வழிகாட்டி. இது சநாதன தர்மத்தில் வேர்கொண்ட ஓர் உண்மை. குரு தத்துவத்தைப் பேணி நடைமுறைப்படுத்தும் செயல்பாடே குருசாமியின் பணியில் வெளிப்படுகின்றது. ஐயப்ப வழிபாட்டின் இன்றியமையா அங்கம் குருசாமி.

ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு குருசாமி உண்டு. சபரிக்கு யாத்திரை மேற்கொள்ள விரும்பும் பக்தர்களுக்கு ஐயப்ப நெறியைப் புரிய வைத்தாலும், அவர்களை முறையாக விரத நெறி ஏற்கச் செய்தலும், யாத்திரையில் வழி நடத்திச் செல்லுதலும் குருசாமியின் கடமையாகும். சபரிமலை யாத்திரையின் நாளும் நேரமும் குறிப்பவர் அவர்; தக்க வண்ணம் கட்டுக்கட்டும் ஏற்பாட்டினைச் செய்பவர் அவர்; சரணம் ஒலிக்க இருமுடிக்குத் தீபாராதனை செய்து இருமுடிக் கட்டினைத் தலையில் ஏற்றி யாத்திரை புறப்பாட்டை நெறிப்படுத்துபவர் அவர்; இப்புறப்பாட்டுக் காட்சி மங்கலமானது; ஆனந்தமானது. இம் மங்கலத்தின் சரடு சபரிமலை சந்நிதானத்தில் தரிசனம் கண்டு பரவசமாவது வரை நீள்கிறது. இதனைப் பேணிக்காக்கும் பொறுப்புடையவர் குருசாமி. எனவே குரு தத்துவத்தின் நடைமுறைக் காட்சியாக அவர் திகழ்கிறார்.

## குரு தத்துவம்

நான்முகனிடம் கலை பயின்று குரு உபதேசம் பெற்றவர் தர்ம சாஸ்தா. அவர் மணிகண்டனாகப் பந்தள அரசனிடம் வளர்ந்த போது, அரசவைக் குருவிடம் கல்வி பயின்றார். பின்பு அகத்தியர் மணிகண்டனின் அவதார உண்மையை உணர்த்திய போது, பந்தள அரசனுக்கும் அரசவைக் குருவுக்கும் மணிகண்டப் பிரபுவிடம் குரு உபதேசம் பெறும் பேறு கிட்டியது. தன் குருவிற்கு உபதேசம் செய்தமையால் குருவின் குருவாகவும் பொலிகின்றது ஐயன் பெருமை. அனைத்துக்கும் மேலாக, சபரிமலையில் அமைந்த ஐயப்பன் திருக்கோலம் வலக்கரத்தால் 'சின் முத்திரை' காட்டுகிறது. இது ஐயப்பன் குரு தத்துவமாகத் திகழ்வதை நன்கு விளக்கும்.

## குருதிபூஜை

சபரிமலையில் பக்தர்கள் நலங்காக்க நடக்கும் விசேஷ பூஜை. மகரவிளக்கு விழா நாட்களில் திருநடை சாத்துவதற்கு முதல் நாள் நடைபெறும். இரவில் மணிமண்டபத்தின் முன்பு காளி தேவியைப் பிரதானமாகக் கொண்டு நூற்றுக்கும் மேலான உப தேவதைகளுக்கும் பீடங்கள் தந்து இப்பூஜை நிகழும். இப்பூஜையினைப் பெருநாடு எனும் ஊரிலிருந்து வரும் பரம்பரையினர் பந்தள ராஜா முன்னிலையில் செய்வர். வன தேவதைகளைப் பிரீதி செய்தல் இப்பூஜையின் நோக்கம்.

## குளத்துப்புழை

செங்கோட்டை திருவனந்தபுரம் வழித்தடத்தில் உள்ளது.

**உமையவள் பாலகனே... சரணம் ஐயப்பா ✿ ஊக்கமளிப்பவனே... சரணம் ஐயப்பா**